1981 ஏப்ரல் 20]

1980-ல் நடந்த மேல்நிலைக் கல்வித் தேர்வு.

* வினா எண் 837.—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 ஆம் ஆண்டு மேல்நிலைக் கல்வி தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களின் வரிசையில் முதல் 15 வரை ஆங்கில பாட மொழியில் பயின்றவர்கள்தான் என்பது உண்மையா ?

(ஆ) அவர்களும் வடமாவட்டங்களில் உள்ளவர்கள்தான் என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இல்லை. தென் மாவட்டங்களிலும் அவர்கள் இருக்கிறார்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு மேல்நிலைத் தேர்விலே தேர்ச்சி பெற்றவர்கள், அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் வடமாவட்டங்களில் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். தென் மாவட்டங்களில் இருப்பவர்களுடைய கல்வித் தரம் குறைந்திருப்பது இதன் மூலமாகத் தெரிய வருகிறது. அதுபற்றி அரசாங்கம் ஏதாவது ஆய்ந்துள்ளதா? அதற்கான காரணம் என்ன என்பதுபற்றி அரசுக்கு ஏதாவது தகவல் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் இருக்கிறார்கள் என்றுதான் நான் சொன்னேன். இல்லையென்று நான் சொல்லவில்லை. முதல் 15 இடங்கள் வாங்கிய மாணவர்கள் எந்த, எந்த மாவட்டங்களில் என்கிற அடிப்படையிலேதான் வருகிறதே தவிர, பொதுவான தேர்ச்சி விகிதத்தை வைத்து, நாம் அதைச் சொல்லவில்லை. முதல் 15 இடங்களைப் பெற்ற மாணவர்கள், திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, கோவை, திருச்சி, தஞ்சாவூர், பாண்டிச்சேரி, வடஆர்க்காடு, சென்னை என்று இந்த மாவட்டங்களிலே பரீட்சை எழுதிய மாணவர்கள். அதிலே திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை தென் மாவட்டங்கள்.

(முற்பகல் 9.20)

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, இந்த மேல்நிலைப் பள்ளிக் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மேல்நிலைக் கல்வியை தொடர்ந்து அதிகப்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா? அல்லது இத்தோடு நிறுத்திவிடும் முடிவு இருக்கிறதா?

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

பி.எஸ்ஸி., எம்.பிஎட்.,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இப்போதுள்ள நிலைமையில் இருக்கின்ற பள்ளிகளை நல்லபடியாக நடத்தவேண்டும் என்பது அரசின் கருத்து.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, இந்த மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களின் தேர்ச்சித் திறனை உத்தேசித்து ஒவ்வொரு ஆண்டும் ஆரம்பத்திலேயே தேவையான ஆசிரியர்களை அரசாங்கம் நியமிக்குமா? ஏராளமான பள்ளிகளில் உரிய காலத்தில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை. இந்த குறையைப் போக்க அரசு உடனடியாக இந்த ஆண்டில் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, நாம் பட்ஜெட்டை நிறைவேற்றிய பிறகு பணியிடங்களை ஒதுக்கி, ஆசிரியர்களை நியமிக்க ஏற்பாடு செய்கிறோம். எங்காவது குறைபாடு இருந்தால் அது முதலாண்டு மட்டும்தான்; பிறகு சரியாகிவிடும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் 1980 ஆம் ஆண்டு மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள், அதிக மதிப்பெண்கள் பெற்ற 15 பேர்களும் ஆங்கில பாடமொழியில் பயின்றவர்கள்தான் என்பதை ஒப்புக்கொண்டார்கள். நாம் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தமிழைப் பாடமொழியாக ஆட்சிமொழியாக வைத்திருக்கிறோம். தமிழைப் பாட மொழியாகக் கொண்டு பயின்றவர்கள் குறைந்த மார்க் வாங்கியதற்குக் காரணம் தமிழில் பயின்றதால் தரம் குறைந்துவிட்டதா? ஏன் ஆங்கிலப் பாட மொழியில் பயின்ற மாணவர்கள் அளவுக்கு அவர்களுடைய தரம் உயரவில்லை என்பதை ஆராய்ந்து, அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, மார்க் வாங்குவது என்பது அறிவுத் திறனைப் பொறுத்தது. நல்ல அறிவுத் திறனைப் பொறுத்தவரையில் ஆங்கிலத்தில் படித்தாலும், தமிழில் படித்தாலும் இந்த வித்தியாசம் இருக்கிறது. நல்ல அறிவுத் திறன் உள்ள மாணவர்கள் தமிழிலே படித்தால் நல்ல மார்க் வாங்கலாம். ஆனால் அறிவுத் திறனுள்ளவர்கள் ஆங்கிலப் பாடமொழியில் படிக்கிறார்கள். ஆங்கிலத்தில் படித்தால் கொஞ்சம் சிரமப்பட்டு படிக்க வேண்டும்; தமிழில் படித்தால் கஷ்டம் இல்லாமல் படிக்கலாம். ஆகையால் இப்போது இருக்கிற நிலைமையில் நல்ல அறிவுத் திறமையுள்ள மாணவர்கள் ஆங்கிலப் பாடமொழியில் சேர்ந்து படிக்கின்ற நிலைமை இருக்கிறது.